சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **122/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | ராமச்சந்திரன் |
| தந்தை பெயர் | : | துரைசாமி |
| கிராமம் | : | தெற்குதோட்ட கிராமம் |
| தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| தொழில் | : | துணை இயக்குநர் வட்டார தடய அறிவியல் ஆய்வகம், தஞ்சாவூர் |
| வயது | : | 59 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

## முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது தஞ்சாவூரில் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்குநராக

பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.06.2025-ம் தேதியன்று தஞ்சாவூர் மாவட்ட காவல் அலவலகத்தில் உள்ள இயங்கும் தடய ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்தபோது கூடுதல் பொறுப்பாக இயங்கும் தடய அறிவியல் ஆய்வகம் திருவாரூர் பொறுப்புகளை கூடுதலாக கவனித்து வந்தேன். அன்று 10.30 மணியளவில் திருவாரூர்மாவட்ட காவல் அலுவலகத்தில் உள்ள தனி பிரிவில் இருந்து ஒரு தகவல் கிடைக்கப்பெற்றது. அந்த தகவலில் திருவாரூர் மாவட்டம் நன்னிலம் உட்கோட்டம் குடவாசல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மணக்கால் அய்யம்பேட்டை பருத்திக்கொள்ளைத்தெருவில் வசித்தும் சின்னப்பிளை மகன் செல்வராஜ் என்பவரின் வீடு எரிந்துவிட்டதாகவும் சம்பவ இடத்தை ஆய்வு செய்து ஆலோசனை மற்றும் ஆய்வறிக்கை வழங்கும் படி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் சம்பவ இடத்திற்கு சென்று கடந்த 05.06.2025-ம் தேதி பகல் 12.10 மணிக்கு ஆய்வு செய்ததில் எனக்கு தெரிய வந்த விபரங்கள்,

1. சம்பவ இடமானது கீற்று வேயப்பட்ட வீடாகும்.
2. வீடானது வடக்கு தெற்கு வீடாகும்.
3. வீட்டின் முன்புறம் சாலை நோக்கியவாறு இருந்தது.
4. கம்பி வேலி மற்றும் உயிர்வேலி போன்ற பாதுகாப்புகள் வீட்டை சுற்றி காணப்படவில்லை.
5. சம்பவ இடமானது சுலபமாக அனுகக்கூடியவாறு இருந்தது.
6. வீட்டின் முன்பக்க கதவின் பூட்டு பூட்டிய நிலையில் காணப்பட்டது.
7. முன்பக்க கதவானது வெளிப்புறத்திலிருந்து வலுக்கட்டாயமாக உடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்து.
8. வீட்டின் பொருட்கள் எரிந்த நிலையில் காணப்பட்டது.
9. வீட்டின் கூரை பகுதி எரிந்த நிலையில் காணப்பட்டது.
10. வீட்டின் கூரை முன்பக்கமாக எரிந்த நிலையில் காணப்பட்டது.

11. வீட்டின் பின்பக்க கூரை நெருப்பினால் அதிகமாக பாதிக்கப்படவில்லை.

12. வீட்டின் முன்பக்க வலது மூலையில் உள்ள கூரை மிகவும் எரிந்த நிலையில் காணப்பட்டது.

13. அங்கிருந்த சிலர் வீட்டின் முன்பக்க வலதுமூலையில் உள்ள கூரையில் முதல் நெருப்பு தென்பட்டதாக கூறினர்.

14. நெருப்பு முன்பகுதியில் ஆரம்பித்து பின்பகுதியை நோக்கி பரவி காணப்பட்டிருந்தது.

15. மின்சார வசதி மேற்படி வீட்டிற்கு செய்யப்படாமல் உள்ளது.

16. சமயலரை வீட்டின் பின்பக்கத்தில் காணப்பட்டது.

17. வீட்டின் பின்புறம் மண் அடுப்புகள் காணப்பட்டது.

18. எல்.பி.ஜி ஸ்டவ்கல் அணைந்த நிலையில் காணப்பட்டது.

19. வீட்டின் பின்பகுதியில் நெருப்பு உருவாகியதற்கான அறிகுறி காணப்படவில்லை.

இதன்பிறகு, நன்னிலம் உட்கோட்ட துணைக்கண்காணிப்பாளர் திரு. கே. தமிழ்மாறன் அவர்களிடம் எரிந்த தடயங்களை ஆய்வுக்காக சேகரித்து அனுப்பி வைக்கும்படி ஆலோசனை கூறினேன். இறுதியாக மேற்கண்ட கவனித்தல்களின் அடிப்படையில் இது ஒரு தீ வைப்பாக இருக்கலாம் என்றும் தீவிர விசாரணைக்கு பிறகு இறுதி முடிவு எடுக்கும்படி கூறியிருந்தேன். நான் காவல்துறைக்கு இது தொடர்பாக குற்ற நிகழ்விட ஆய்வறிக்கை ஒன்றை வழங்கினேன். அந்த ஆய்வறிக்கை **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

சாலையில் செல்பவர்கள் புகை பிடிப்பவராக இருந்து அவர் சரவர பீடி அல்லது சிகரட்டை சரிவர அணைக்காமல் தூக்கி எரியும் பட்சத்தில் தீப்பிடிக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான். வீட்டிற்குள் மின் சாதனங்கள் இருந்தது ஆனால் முறையாக மின் இணைப்பு பெறாமல் தவறான

வகையில் மின்சாரத்தை பெற்று பயன்படுத்தும்போது இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டா என்றால் இந்த தீ விபத்து வலது பக்க மூலையிலிருந்து ஏற்பட்டது அங்கு மின்சார சாதனங்கள் எதுவும் பயன்படுத்தவில்லை அதனால் மின் கசிவின் காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக என்னால் கருத இயலவில்லை. நான் செல்வராஜ் வீடு என்பதற்கான ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.12 18:44:20 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.